Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 25-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கம்சலா | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | | ஏழுமலை | சமயம் | - | |
| கிராமம் | - | வீரபாண்டி | வயது | - | 40 |

25.07.2025

1, 2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜரில்லை. 3 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது வீரபாண்டியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 06.00 மணியளவில் நான் காட்டில் மாடுகளை மேய்த்துவிட்டு மாட்டை வீட்டில் வந்து கட்டினேன். எதிரி சேகர் அந்த மாட்டை அவர் வீட்டில் கட்டிவைத்தார். அதை கேட்க சென்ற என்னை எதிரி சேகர் ஊரஒதவத்தளே, தெவுடியா என அசிங்கமாக பேசி எனது கண்ணத்தில் அடித்தார். எதிரி சுமதி என்னை சாவடி என்று சொல்லி எட்டி உதைத்தார். எதிரி மணிகண்டன் தடியால் எனது முதுகில் அடித்தார். எதிரி சேகர் என்னை கல்லால் தலையில் அடித்தார்.

2. அங்கிருந்தவர்கள் சண்டைணை விலக்கிவிட்டு அடிப்பட்ட என்னை எங்கள் ஊரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு முடியாது என்று சொன்னதால் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அதன் பிறகு எதிரிகள் மீது அரகண்டநல்லூர்காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது, அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.** போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகாரை யார் எழுதியது என்றால் அது எனக்கு தெரியவில்லை, எனக்கு 3 நாள் கழித்து தான் எனக்கு நினைவு வந்தது. புகாரை நான் கொடுக்கவில்லை, எனது மகனும், மகளும் கொடுத்தார்கள். 3 நாள் நான் மருத்துவமனையில் நினைவில்லாமல் இருந்தேனா என்றால் ஆமாம். அதனால் எனது மகள் தான் கம்பளைண்ட் கொடுத்தது என்றால் ஆமாம்.

2. அவர்கள் கொடுத்த புகாரில் என்ன என்ன சொல்லியுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை, எனக்கு தெரியாது. மருத்துவமனையிலிருந்து வந்த போது போலீசார் என்னை தனியாக விசாரித்தார்களா என்றால் இல்லை. சேகர் மாட்டை ஓட்டி போய் வீட்டில் கட்டியதை நான் பார்த்தேனா என்றால் நான் கண்ணால் பார்த்தேன்.

3. எங்கள் ஊர் கோனார் நிலத்தில் உள்ள பயிரை எனது மாடு மேய்ந்ததற்காக சேகர் அதை இழுத்து வந்து அவுங்க வீட்டில் கட்டினார் என்றால் பயிர் மேயவில்லை, நான் தான் அதை மேயவைத்து விறகுடன் ஓட்டிக்கொண்டு வந்தேன். புகாரிலும், போலீசார் விசாரணையிலும் எங்கள் ஊர் கோனார் நிலத்தில் உள்ள பயிரை எனது மாடு மேய்ந்ததற்காக சேகர் அதை இழுத்து வந்து அவுங்க வீட்டில் கட்டினார் என்று சொல்லியிருந்தால் அது தவறா என்றால் பயிரை மேயவில்லை, அப்படியே மேய்ந்திருந்தாலும் என்னை பஞ்சாயத்தில் அபராதம் கட்டச்சொல்லியிருந்தால் நான் கட்டிருப்பேன், அதற்காக என்னை ஏன் அடித்தார் என்று சாட்சி கேட்கிறார்.

4. சம்பவம் நடந்த தேதியோ, மாதமோ தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அப்படி நடந்திருந்தால் நான் கம்பளைண்ட் கொடுத்திருப்பேன், எனது மகளை வைத்து கம்பளைண்ட் கொடுத்திருக்கமாட்டேன் என்றால் நான் நினைவில்லாமல் இருந்ததால் எனது மகள் கம்பளைண்ட் கொடுத்தார், நான் செத்திருந்தால் என்ன ஆகும் என்று சாட்சி கேட்கிறார். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனது மகளை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் பொய் புகார் ஏன் கொடுக்க போகிறேன், அவருக்கும் எனக்கும் என்ன நடந்தது, உண்மையில் நடந்ததை சொல்கிறேன்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | பார்த்தீபன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த /பெ. | | ஏழுமலை | சமயம் | - | |
| கிராமம் | - | வீரபாண்டி | வயது | - | 26 |

25.07.2025

1, 2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜரில்லை. 3 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது வீரபாண்டியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. எதிரிகளை தெரியும். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 03.00-04.00 மணியளவில் எனது தாயாரை எதிரிகள் அடித்துவிட்டதாக அங்கு இருந்தவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் எனது தாயரை சென்று பார்த்த போது அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது.

2. எதற்கு எனது தாயாரை அடித்தீர்கள் என்று எதிரிகளை கேட்ட போது எதிரிகளுக்கும், எனக்கும் சண்டை ஏற்பட்டது. அதில்எனது முதுகை யாரோ ஒருவர் கடித்துவிட்டார். பின்பு அங்கிருந்தவர்கள் சண்டையை மறித்துவிட்டார்கள். காயமடைந்த எனது தாயரை எங்கள் ஊரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு முடியாது என்று சொன்னதால் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். எனக்கு வெளி காயம் எதுவும் இல்லாததால் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்த தேதியோ, மாதமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எனது அம்மாவை அடித்ததாக சொல்லும் நிகழ்வை நான் நேரடியாக பார்க்கவில்லை, கேள்வி பட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். கம்பளைண்ட் அன்றைக்கே கொடுத்தேனா என்றால் நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன், அங்கு வந்து போலீசார் எப்படி, என்ன நடந்தது என்று என் அம்மாவிடம் கேட்டார். எனது அக்கா தான் புகார் கொடுத்தார். அது சம்மந்தமாக எனக்கு தெரியாது.

2. மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு போனதோடு சரி போலீசார் என்னை அதன் பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது அக்கா கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சொல்வது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 25-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | சித்தாள் |
| பெயர். | - | காமாட்சி | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க /பெ. | | மணிகண்டன் | சமயம் | - | |
| கிராமம் | - | வீரபாண்டி | வயது | - | 36 |

25.07.2025

1, 2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜரில்லை. 3 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது வீரபாண்டியில் வசித்து சித்தாள் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. அ.சா.2 எனது தம்பி. எதிரிகளை தெரியும். 2020 ல் ஒரு நாள் சாயந்தரம் 05.00 மணியளவில் எனது அம்மா மாட்டை மேய்த்துவிட்டு வீட்டில் வந்து கட்டினார். அந்த மாட்டை எதிரி சேகர் அவுத்து சென்றுவிட்டார். அதை பார்த்த நான் எனது தாயாரிடம் தெரிவித்தேன். எனது தாயார் அந்த மாட்டை அவுப்பதற்காக அங்கு சென்ற போது எதிரி சேகர் எனது தாயாரை கையால் கண்ணத்தில் அடித்தார்.

2. பின்பு எதிரி சுமதி எனது தாயாரை இந்த தெவுடியாவை இங்கே அடித்து சாவடி என்று கூறினார். அப்போது எதிரி மணிகண்டன் அங்கிருந்த தடியால் எனது தாயாரின் முதுகில் அடித்தார்.எதிரி சேகர் அங்கிருந்த கல்லால் எனது தாயாரின் தலையில் குத்தினார். எனது தாயார் அங்கேயே மயக்கமாகிவிட்டார். சண்டையை மறிக்க வந்த எனது தம்பியை எதிரி சுமதி அவர் முதுகில் கடித்துவிட்டார். பின்பு அங்கிருந்தவர்கள் சண்டையை மறித்துவிட்டார்கள். காயமடைந்த எனது தாயாரை திருக்கோவிலூர் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்மந்தமாக மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த தேதியோ, மாதமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரை யார் எழுதியது என்றால் ஸ்டேசனில் போலீசார் எழுதினார்கள். புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் நான் சொல்ல சொல்ல அவர் எழுதினார். புகாரை எத்தனை நாட்கள் கழித்து கொடுத்தேன் என்றால் அம்மாவை உறாஸ்பிட்டலில் சேர்த்த மறுநாள் சென்று கொடுத்தேன்.

2. சாட்சியிடம் புகாரை காண்பித்து புகார் அன்றைய தேதிலேயே கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம் என்று சாட்சி சொல்கிறார். புகார் கொடுக்கும் போது யார் யார் போனது என்றால் நான், எங்க அப்பா, எனது தம்பி மற்றும் எனது அண்ணன் ஆகியோர்கள் சென்றோம். நான் தான் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

3. சம்பவம் நடந்த பிறகு கேள்வி பட்டு தான் போனேனா என்றால் எங்க அம்மாவை அடிப்பதாக பக்கத்து வீட்டு பாப்பா தமிழ்ச்செல்வி சொன்னதின் பேரில் பக்கத்து தெருவில் இருந்த நான் அங்கு ஓடி பார்த்த போது சேகர் கல்லால் எங்க அம்மாவை அடித்தார், நான் கத்தியதை பார்த்து எனது தம்பி வந்தான், சுமதி என்பவர் தம்பியை பின்னாடி முதுகில் கடித்தார்.

4. புகார் கொடுத்ததோடு சரி அதன் பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் அதற்கு மறுநாள் வந்து எங்கு சண்டை நடந்தது, என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். நான் சொல்வது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், எங்க அம்மா தான் புகார்தாரர் அதற்கு நான் சென்று புகார் கொடுத்திருக்கமாட்டேன் என்றால் பொய் புகார் ஏன் நான் கொடுக்க போகிறேன், அவருக்கும் எனக்கும் என்ன நடந்தது, எங்க அம்மா செத்திருந்தால் இந்நேரம் 5 வருடம் ஆகியிருக்கும் என்று சொல்லிவிட்டு சாட்சி அழுகிறார்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 25-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | ஏழுமலை | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த /பெ. | | நமச்சிவாயம் | சமயம் | - | |
| கிராமம் | - | வீரபாண்டி | வயது | - | 61 |

25.07.2025

1, 2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜரில்லை. 3 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது வீரபாண்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு எதிரிகள் எனது மனைவியை அடித்தது சம்மந்தமாக வந்து விசாரணை செய்தார்கள். அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த தேதியோ, மாதமோ தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்க நான் செல்லவில்லை, நான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அதன் பிறகு வந்து விசாரித்தார்கள். எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆம்.

2. இந்த வழக்கிற்காக 2 , 3 கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஒரே கையெழுத்து தான். எனது மகள் கொடுத்த கம்பளைண்ட்க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.